திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடிநீர் வாரியம் மக்களுக்குக் குடிநீரோடு பாம்பு, விலாங்கு இவற்றையும் சேர்த்துக் கொடுக்கக்கூடாது என்று உறுதியாக இந்த அரசாங்கம் தெரிவிக்குமா?

(விடை இல்லை.)

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த வாரியத்தின் உறுப்பினர்களாக மறுபடியும் அதிகாரிகளே முழுமையாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா போர்டுகளிலும் அவர்களே இருப்பதினால், அவர்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி, முழு நேரத்தையும் செலவிட்டு, வேலை செய்ய இயலாமல் இருப்பதினால், அதிகாரப் பற்றற்றவர்களையும் இத்தகைய வாரியத்தில் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1972-ம் ஆண்டுக்குள் நாம் எல்லா இடங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரை வழங்க வேண்டும் என்ற திட்டத்தை விரிவாக செயல்படுத்துவதற்கு, பல்வேறு துறைகளும் தனித்தனியாக இயங்குவதை ஒன்றாக இணைத்துச் செயல்படவேண்டும் என்ற முறையிலே இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே அதிகாரப் பற்றற்றவர்களை நியமிக்கவேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

வடஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

***166 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 1967 மார்ச் முதல் 1968 பிப்ரவரி முடிய சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வழக்குக்காகச் செலவிட்ட தொகை எவ்வளவு?

(இ) இந்த வழக்குகள் சம்பந்தமாக செலவு செய்ய மேற்படி வங்கியின் சிப்பந்திகளின் சம்பளத்திலிருந்து 4 சதவிகிதம் வசூலிக்கப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஒன்றுமில்லை.

(இ) இல்லை.

பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்

***167 வினா—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு—புன்னம்புழா நதியில் கட்டப்படும் அணையின் மூலம் பாசனம் பெறும் பகுதிகள் யாவை?

(இ) இப்பாசன வசதிகளுக்கெனச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ள தொகை என்ன?

1970 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :(அ) இம் மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்தில் பாயும் பாண்டியாறு, புன்னம்புழா மற்றும் சில சிற்றாறுகளின் நீரை மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக மட்டும் பயன்படுத்துவதே நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்திலுள்ள பாண்டியாறு—புன்னம்புழா புனல் மின்சக்தித் திட்டத்தின் நோக்கமாகும். கேரள அரசுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி மின்சக்தி உற்பத்திக்காக விடப்படும் இந்த ஆறுகளின் நீரை கேரள மாநிலத்திற்கு மீண்டும் திருப்பிவிட வேண்டுமேயன்றி நம் மாநிலத்தில் பாசன வசதிக்காகப் பயன்படுத்த முடியாது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தப் பாண்டியாறு, புன்னம்புழா அணை கட்டி, அதன் மூலம் மின்சக்தியை எடுத்துக் கொண்டு, அந்தத் தண்ணீரை மேற்கே நாம் விடுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி அந்த அணையைக் கட்டி மின்சக்தி எடுத்துபோக, தண்ணீர் மேற்கே செல்வதினால் கேரள அரசுக்கு எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. எனவே, கேரள அரசோடு நம்முடைய அரசு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அந்தத் தண்ணீரை, கேரளத்திற்கு மேற்கே போகிற தண்ணீரை, பெரியாறுக்குக் குறுக்கே அணை கட்டி, கிழக்கே திருப்பினால், அதன் மூலம் அவினாசி, பல்லடம் தாலூகாக்கள் பயனடையும். ஆகவே, இந்த ஒப்பந்தத்திற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வாரா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற ஒப்பந்தம் 14—10—1965-ல் மாண்புமிகு திரு. வெங்கட்டராமன் இருக்கும்பொழுது இரண்டு அரசும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற யோசனைப்படி பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. வேலுசாமி : மின்சாரமானது, ஆயில், அணு இது போன்ற பல்வேறு வகையிலே எடுக்கப்படுகிறது. தண்ணீர் இம் மாதிரி செயற்கை முறை மூலம் கிடைக்காது. தண்ணீர்ப் பற்றாக் குறை நமது மாநிலத்தில் அதிகமாக இருக்கிற காரணத்தினால் பாண்டியாறு, புன்னம்புழா அணையிலிருந்து வருகிற தண்ணீரை வைத்து மொய்யாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி கோவை ஜில்லாவுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : நான் ஏற்கெனவே சொன்னேன். அப்படி ஒரு திட்டத்திற்கான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.